**GOVERNMENT OF PUDUCHERRY**
**TRANSPORT DEPARTMENT**
***

**No.4/TD/TC/PA/2017** **Puducherry, dt. 13.04.2017**

**PRESS RELEASE**
**WEARING OF HELMET BECOMES COMPULSORY IN PUDUCHERRY**
**STRICT ENFORCEMENT FROM 1ST MAY, 2017 ONWARDS**

In order to control the increasing accident rate the State Road Safety Council under the Chairmanship of Hon'ble Chief Minister in its second meeting held on 25.01.2017 decided to strictly enforce compulsory wearing of helmet from 01.05.2017 onwards for the driver and pillion rider of the two wheelers.

It is notable that out of total sale of vehicles in Puducherry 85% of them are two wheelers. In the year 2016-17 out of total sale of 66,378 vehicles, the number of two wheelers are 57,439. Further in the year 2016-17 out of the total road accidents of 1755 the number of fatalities were 219. Out of the accidents, 831 accidents were related to two wheelers and the number of fatalities from two wheelers were 79.

A quality ISI helmet reduces chances of severe head injury by over 70%. The daily commuters to offices and to colleges in two wheelers have to necessarily wear helmet for their safety. In this regard circulars have already been sent to all the Government Departments. With regard to students of schools and colleges communication have already been sent about the need for two wheeler licence and wearing of helmets.

All those who are driving two wheelers should necessarily have Driving Licence and the vehicle should have Registration Certificate, Fitness Certificate, Insurance Policy and Pollution Under Control Certificate. Further the driver of two wheeler vehicle and pillion rider has to necessarily travel wearing helmet. The helmet is compulsory for both male and female. Only two persons are permitted to travel in a two wheeler including the driver. While driving vehicle using of Cell Phone is compulsorily banned.

Those who do not follow the above regulations are liable to be penalised with a penalty of Rs.100/-, Rs.300/- and Rs.500/- based on the offences they commit. Effective enforcement is planned from 1st May onwards in this regard. All are requested to follow the Rules of Road Regulations so as to avoid penal action.

It is noteworthy that the penalty payable for traffic related offences are likely to be considerably increased shortly. As such all those who drive and ride two wheelers shall ensure that they immediately purchase the required helmet and avoid penal action.

GOVT. OF PONDICHERRY * TRANSPORT DEPARTMENT *

**(S.D. SUNDARESAN)**
**TRANSPORT COMMISSIONER**

புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

**No.4/TD/TC/PA/2017** **Date: 13.04.2017**

## செய்திக் குறிப்பு
## புதுச்சேரியில் தலைக்கவசம் அணிவது கட்டாயமாகிறது
## மே 1 முதல் தீவிர அமுலாக்கம் - போக்குவரத்துத் துறை அறிவிப்பு

புதுச்சேரியில் பெருகிவரும் வாகன விபத்துகளை குறைப்பது தொடர்பாக கடந்த 25.01.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் நடைபெற்ற மாநில சாலைப் பாதுகாப்பு சபையின் தீர்மானப்படி, எதிர்வரும் 01.05.2017 முதல் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இரு சக்கர வாகன ஓட்டுனர் மற்றும் பயணிப்போர் தலைக்கவசம் அணிவது கட்டாயமாகிறது.

புதுச்சேரியில் விற்பனையாகும் வாகனங்களில் 85% இருசக்கர வாகனங்களே. கடந்த 2016-17 நிதியாண்டில் புதுவையில் விற்பனையான 66,378 வாகனங்களில் இருசக்கர வாகனங்களின் எண்ணிக்கை 57,439 ஆகும். கடந்த 2016-17ஆம் நிதியாண்டில் புதுச்சேரியில் நிகழ்ந்த 1755 விபத்துகளில் 219 நபர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் 831 விபத்துகள் இருசக்கர வாகனம் ஓட்டுனர்களுக்கு ஏற்பட்டுள்ளது; விபத்தின் மூலம் 79 இருசக்கர வாகன ஓட்டுனர் உயிரிழந்துள்ளனர்.

தரமான ISI சான்று பெற்ற தலைகவசம் அணிந்து இரு சக்கர வாகனம் ஓட்டுவதால் தலைக்கு ஏற்படும் படுகாயம் 70% மேல் தவிர்க்கப்படுகிறது. தினமும் அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் சொந்த வேலையாக இரு சக்கர வாகனங்கள் பயன்படுத்தும் மாணவ மாணவியர், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் தவறாமல் தலை கவசம் (ஹெல்மட்) அணிந்து பாதுகாப்பான சாலைப் பயணத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இரு சக்கர வாகனம் ஓட்டும் ஆண் பெண் இரு பாலரும் தலை கவசம் அணிய வேண்டும்.

பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இரு சக்கர வாகனங்களில் செல்லும் மாணவ மாணவியர் அதற்குரிய ஓட்டுனர் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், தலைக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும். இது குறித்த சுற்றறிக்கை அனைத்து மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கும் முன்னரே அனுப்பப்பட்டுள்ளன.

இரு சக்கர வாகன ஓட்டுபவர்கள் உரிய ஓட்டுனர் உரிமம், வாகன உரிமைச் சான்றிதழ், வாகன தகுதிச் சான்றிதழ், வாகன காப்பீட்டு சான்றிதழ், வாகன சான்றிதழ்கள் ஆகியவற்றினை தவறாமல் எடுத்துச் செல்ல வேண்டும். வாகனம் ஓட்டுபவர் மற்றும் பின் அமர்ந்து செல்லுபவர் தலைக்கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும். வாகனம் ஓட்டிச் செல்லும் போது செல்போன் பேசுவது கண்டிப்பாக கூடாது. இரு சக்கர வாகனங்களில் இருவர் மட்டுமே பயணிக்க அனுமதி உண்டு.

மேற்கண்ட நெறிமுறையினை கடைப்பிடிக்காத இருசக்கர வாகன ஓட்டிகளிடம் அவர்கள் செய்யும் தவறுகளுக்கேற்ப ஒவ்வொரு தவருக்கும் ரூ.100/-, ரூ.300/- மற்றும் ரூ.500/- என அபராதம் விதிக்கப்படும். போக்குவரத்து சட்ட விதிகளை மீறுவதால் ஏற்படும் சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை தவிற்பதற்காக மேற்படி நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என்பதால், அனைத்து தரப்பினரும் சாலை விதிகளை கடைபிடித்து விபத்தினை தவிர்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சாலை விதிகளை கடை பிடிக்காதவர்கள் செலுத்த வேண்டிய அபராதத் தொகை விரைவில் பன்மடங்கு உயர வாய்ப்புள்ளது என்பதால் தகுதியான தலைக்கவசம் வாங்கி அணிந்து போக்குவரத்துத் துறை மற்றும் போக்குவரத்து காவல் துறையின் நடவடிக்கையினை தவிர்த்து தமது பாதுகாப்பினையும் உறுதிசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVT. OF PONDICHERRY TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்